பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 20 ஆடி: 5 ஷஃபா: 14 இதழ்: 160
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 21-7-'8

# கோட்டையில் வங்கிஊழியர் மீது காடையர் தாக்குதல்

## பேரவையில் அமிர் ஆட்சேபம்

(கொழும்பு)

நேற்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த வங்கி ஊழியர்கள் கொழும்புக்கோட்டையில் வைத்து காடையர்களால் தாக்கப்பட்டதாக நேற்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் தேசிய அரசுப் பேரவையில் ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தார்.

வங்கி ஊழியர் சங்கத் தலைவர் தமக்கு இதுபற்றி அறிவித்திருப்பதாக திரு. அமிர்தலிங்கம் சபையில் குறிப்பிட்டார். அமைதியாகவும் ஒழுங்காகவும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த வங்கி ஊழியர்களைக் காடையர்கள் தாக்கியதாகவும், இதனை பொலிசார் பார்த்துக் கொண்டிருந்ததாவும் தமக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதாக திரு. அமிர்தலிங்கம் கூறினர்.

வேலைநிறுத்தம் செய்யும் உரிமை ஊழியர்களுக்குண்டு.

(6ம் பக்கம் பார்க்க)

சிவில் உரிமைகளை ரத்துச் செய்யும்

# சட்டமூலங்களை எதிர்த்து மைத்திரிஒழுங்குபிரச்னை

## காமன்ஸ்சபையை உதாரணம் காட்டி சபாநாயகர் நிராகரிப்பு

(கொழும்பு)

உள்ளூர் அதிகாரசபைகள் (தகுதியீனங்கள் விதித்தல்) சம்பந்தமான இரு சட்டமூலங்களையும் நேற்று பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாஸ தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பித்தபோது, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உபதலைவரும், மதவாச்சித் தொகுதி பேரவை உறுப்பினருமான திரு. மைத்திரிபால சேனநாயக்கா ஒழுங்குப் பிரச்னைகளைக் கிளப்பினர்.

உள்ளூராட்சிமன்ற ஒழுங்கினங்களைப்பற்றி விசாரித்த ஆணைக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் குற்றம் காணப்பட்டவர்களின் குடியியல் உரிமைகளைப் பறிப்பது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல்செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற விசாரணையிலுள்ள ஒரு விஷயம் தொடர்பாக சபையில் விவாதிப்பது நீதிமன்ற உரிமையை மீறிய செயலாகும் என்று திரு. மைத்திரிபால சேனநாயகா குறிப்பிட்டார்.

இந்த ஒழுங்குப்பிரச்னையை சபாநாயகர் திரு. ஆனந்த டி அல்விஸ் நிராகரித்தார். நீதிமன்றத்தை மீறிய செயல் எதுவும் இதில் இல்லை. உங்கள் அரசு ஏற்படுத்திய அரசியல் சட்டத்தின்படி இந்த சபையே அதிஉயர்ந்த அதிகாரபீடமாகும் என்று சபாநாயகர் தெரிவித்தபோது சபையில் பலத்த ஆரவாரம் ஏற்பட்டது. இவ்வாறு சட்டமூலங்கள் காமன்ஸ்சபையில் நிறைவேற்றப்பட்டிருப்பதையும் அவர் உதாரணம் காட்டினுர்.

சபையின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் கிளப்பியுள்ள இந்த ஒழுங்குப்பிரச்னையை நிராகரிப்பதில் தாம் கவலையடைவதாகவும் சபாநாயகர் தெரிவித்தார்.

இந்த ஒழுங்குப்பிரச்னைக்கு பிரதமமந்திரி திரு. ஆர். பிரேமதாசா பதிலளிக்கும்போது சிறிலங்காசுதந்திரக் கட்சி அரசாங்கம் கொண்டு வந்த அரசியல் சட்டத்தின்படி இந்த சபையே உயர் அதிகாரம்கொண்ட சபையாகும். ஆனாலும் நீங்கள் இதனை அரசியல் சட்டநீதிமன்றத்தில் கிளப்பமுடியும். எனினும் சபையின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களால்நிறைவேற்றப்பட்டால் இது சட்டமாகிவிடும். மூன்றில் இரண்டு பங்கு மாத்திரமல்ல அதற்கு மேலான பெரும்பான்மையுடன் இதனை எங்களால் நிறைவேற்றமுடியும் என்றுர்.

சபையின் பதிவுக்காகவே இந்த ஆட்சபனையைத் தாம்

[6-ம் பக்கம் பார்க்க]

### பீலிக்ஸ் மனுமீது ஆணையாளர்களுக்கு நோட்டீஸ்

(கொழும்பு)

மாநகரசபை ஊழல்கள் பற்றி விசாரணை நடத்திய ஆணையாளர் ஜி. ஏ. எஸ். சில்வாவுக்கும் நகரசபைகள் பற்றி விசாரணை நடத்திய ஆணையாளர் எஸ். டபிள்யு குணவர்த்தனவுக்கும் சுப்ரீம் கோர்ட் நேற்று நோட்டீஸ் பிறப்பித்தது.

இந்த ஆணையாளர்கள் தமது அறிக்கைகளில் குற்றவாளிகளாகக் கண்டுள்ள முன்னுள் உள்ளூராட்சி,

(6ம் பக்கம் பார்க்க)

# வேலை நிறுத்தம்

## அமைதியாக நடந்தது

### ஊர்வலம் தடுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

முன்னைய ஆட்சிக்காலத்தில் நியமனம்பெற்ற 971 வங்கி ஊழியர்களையும் மீண்டும் வேலைக்கு சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றகோரிக்கையை முன்வைத்து நேற்று அமைதியான முறையில் யாழ்ப்பாணத்திலுள்ள சகல வங்கி ஊழியர்களும் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

வங்கி ஊழியர்களின் வேலைநிறுத்தத்தையொட்டி நேற்று முன்தினமிரவு முதல் சகல வங்கிகளுக்கும் பலத்த பந்தோபஸ்து நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டிருந்தது. ஆயுதம் தாங்கிய பொலிஸார் காவலில் ஈடுபட்டிருந்தனர்.

வங்கி ஊழியர் வேலைநிறுத்தத்தால் நேற்று பெரும்பாலான ஆசிரியர்களின் சம்பளம் வழங்கப்படவில்லையென்று தெரிகின்றது.

வடபிரதேச தொழிற்சங்கங்களின் கூட்டுச்சபையின் ஆதரவில் யாழ்ப்பாணம் இலங்கை வங்கிக் காரியாலயத்தில் இருந்து காலை சுலோக அட்டைகளைத் தாங்கி ஊர்வலமாக வந்த வங்கி ஊழியர்களது

(6ம் பக்கம் பார்க்க)

# மட்டுவில் கொலை வழக்கில் நான்கு எதிரிகளும் விடுதலை

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் கொலை வழக்கில் எதிரிகள் நால்வரும் விடுதலை செய்யப்பட்டனர்.

எதிரிகள் நிரபராதிகள் என்று ஜூரிசபையினர் ஏகமனதாக தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து நீதிபதி எதிரிகளை விடுதலைசெய்தார்.

இவ்வழக்கு யாழ். மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜனப் எம், எம். அப்துல் காதர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 1974ம் ஆண்டு நவம்பர் 14ம் தேதி வேலன் பொன்னன் அல்லது சின்னையா என்பவரை சுட்டுக் கொலை செய்ததாகவும், அதே நேரத்தில் அதே இடத்தில் வேலன் சின்னத்தம்பியையும், வட்டன் நடேசுவையும் கொலை செய்ய முயற்சித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1ம், 2ம், 3ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி எம். சிவசிதம்பரமும் 4ம் எதிரிசார்பில் சட்டத்தரணி ஆர், ஈ, தம்பிரத்தினமும் ஆஜரானுர்கள். அரசதரப்பில் சட்டத்தரணி ஜி. ஜெயக்குமார் வழக்கை நடத்தினுர்.

நேற்றுக்காலை தொகுப்புரை முடிந்ததும் ஜூரிசபையினர் தனிமையில்கூடி மந்திராலோசனை செய்தபின் குற்சாட்டுக்களுக்கும் 4 எதிரிகளும் நிரப

(6-ம் பக்கம் பார்க்க)

பரராசா நஷ்ட ஈட்டு வழக்கு

# சட்டப்புத்தகங்களை சமர்ப்பிக்க நீதிபதி உத்தரவு

(யாழ்ப்பாணம்)

பரராசா நஷ்டஈடு வழக்கு தொடர்பான சில சட்டப்புத்தகங்களை ஆகஸ்ட்மாதம் 7ம் தேதிக்குமுன் தமக்குச் சமர்ப்பிக்குமாறு நீதிபதி நேற்றுத் தெரிவித்தார்.

இவ்வழக்கு யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. ஜி. ஆசிர்வாதம் முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதார் சார்யில் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியமும், அரசதரப்பில் சட்டத்தரணி எஸ். கனகரத்தினமும் ஆஜரானுர்கள்.

இவ்வழக்கில் அரசதரப்பிலும், மனுதார் தரப்பிலும் சுட்டிக்காட்டப்பட்ட புத்தகங்கள் யாழ்ப்பாணத்தில் இல்லாததினுல் அவற்றை ஆகஸ்ட் 7ம் தேதிக்கு முன் பெற்

[6-ம் பக்கம் பார்க்க]

# கலாபதியை விடுவிக்கக்கோரி சுப்ரீம்கோர்ட்டில் மனு

(கொழும்பு)

இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கொலை தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாலசுப்பிரமணியம் கலாபதியை விடுதலை செய்யுமாறு கோரும் மனுவொன்று நேற்று உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

சட்டத்தரணி விவேகானந்தன் இந்த மனுவைத் தாக்கல் செய்தார்.

ஏற்கனவே ஆட்கொணர்வு மனுவொன்று இவர் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டது பற்றியும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரெனன்ஸ் பெரேரா மேற்படி மனுபற்றி குறிப்பிட்டு இப்படியான முயற்சிகளில் ஈடுபட்டால் நீங்கள் கடலில் குதிக்க வேண்டியிருக்கும் என கலாபதியைப் பயமுறுத்தியதாக

(6-ம் பக்கம் பார்க்க)

# கிழக்கு மாகாண வளாகம் வந்தாறுமூலையில் அமையும்

(கொழும்பு)

கிழக்குமாகாணத்தில் வந்தாறுமூலையில் பல்கலைக்கழக வளாகம் அமைக்கப்படும், அதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியாகிவிட்டன ஆனல் அதனைத் திறப்பதற்கான நாள் இன்னமும் முடிவுசெய்யப்படவில்லை. நல்ல நாள் ஒன்றை

[6-ம் பக்கம் பார்க்க]

# “தமிழ்ஈழ நிலப்பரப்பை காத்திட முன் வரவேண்டும்”

-- மன்னார் எம். பி.

## “திட்டமிட்ட குடியேற்றம் உடனிருந்து கொல்லும் வியாதி”

-- அந்தனிசில்

(மாந்தை)

“நாம் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது தமிழ் மக்களின் லட்சியத்தை நிறைவேற்றவேயாகும். அவ்வப்போது தொகுதி மக்களுக்குத் தேவையானவற்றையும் எம்மால் இயன்ற அளவு செய்தே வருகிறோம். மாத்தறையில் வேலைசெய்யும் மன்னார் தொகுதியைச் சேர்ந்த ஒருவர் தன்னை மன்னார் தொகுதிக்கு மாற்றும்படி கேட்டுவந்தால் அதில் நியாயம் இருக்கிறது. ஆனல் மன்னார் தொகுதிக்குள்ளேயே இலுப்பைக் கடவையில் வேலைசெய்பவர் மன்னாருக்கு தன்னை மாற்றும்படி கேட்டுவந்தால் நாம் என்ன செய்வது? இந்த விடயங்களை தமிழ்மக்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும்”

மேற்கண்டவாறு மாந்தை ஊர்து கெபி மைதானத்தில் திரு. பர்ணாந்து தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய மன்னார் எம், பி. திரு. பி, எஸ். சூசைதாசன் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

“உத்தியோகமும் தேவை தான். நீதியான முறையில் இடமாற்றம் கோருவதும் சரி தான். அதேசமயம் எமது அடிப்படை லட்சியத்தை மறந்துவிடக்கூடாது. சகல தொகுதிகளையும் சேர்ந்த தமிழ்மக்கள் தத்தமது தொகுதிகளில் பரவலாக குடியேறவேண்டும். இல்லாவிட்டால் பிறகுடியேற்றங்களால் எமது நிலம்பறிபோய்விடும். எல்லாரும் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை போன்ற பட்டினங்களில் மட்டும்தான் வாழவேண்டுமென்றும் வேலை செய்யவேண்டுமென்றும் நினைத்தால் நாம் எமது தாயகத்தின் பெரும் பகுதியை இழக்கவேண்டிவரும். இதைத் தவிர்த்து தமிழ்ஈழ நிலப்பரப்பை தமிழ்மக்கள் எந்தெந்தவகையில் காத்திட முடியுமோ அந்தந்த வகைகளில் எல்லாரும் இயங்கவேண்டும்”

அடுத்துப் பேசிய ‘தீப்பொறி’ ஆசிரியர் திரு. அந்தனிசில் கூறியதாவது:

கலப்படக்குடியேற்றம் என்று ஆட்சியினர் கூறியதன் அர்த்தம் விரைவில் புலப்படப் போகிறது. மதுறு ஓயா குடியேற்றத் திட்டத்தில் கிழக்கிலங்கை மக்கள் மட்டுமல்ல நாடு பூராவுமிருந்து 45 ஆயிரம் குடும்பங்கள் குடியேற்றப் படவிருப்பதாக அரசு தரப்பில்கூறப்பட்டிருக்கிறது. கிழக்கிலங்கைப் பிரதேசத்தில் கிழக்கிலங்கை மக்கள் தானே குடியேற்றப்பட வேண்டும். அல்லாமல் நாடு பூராவுமிருந்து குடும்பங்கள் குடியேற்றப்படும் என்று ‘பொடி’ வைத்துச் சொல்லப்பட்டிருப்பதன் அர்த்தம் என்ன? கிழக்கிலங்கையில் மீண்டுமொரு பாரிய குடியேற்றம் நிகழப் போகிறது என்பது தான்.

‘கல்லோயாத் திட்டம் கிழக்கில் பட்டிப்பளை ஆறு என்ற தமிழ் நிலத்தை அம்பாறையாக மாற்றியது போல் மதுறுஓயாத் திட்டமும் அபயமாக இல்லாமல் அபாயமாகப் போய்விட்டதே? தேசியம் என்ற போர்வையில் ஒரு இனத்தின் பாரம்பரிய பிரதேசத்தில் பிறிதொரு இனத்தைக் கொண்டு வந்து குவிப்பது தான் தேசியமா? தேசியம் என்ற வார்த்தை ஜாலத்தால் அல்லே, கந்தளாய் அம்பாறை, பதவியா எல்லாம் பறிபோய் விட்டதே.

‘மதுறு ஓயாத்திட்டம்’ தமிழனுக்கு தண்ணீரைத் தருமென்று நினைத்தால் அது கண்ணீரைத் தருகிறதே!

‘சிங்களப் பிரதேசங்களில் தமிழ் குடியேற்றங்கள் எதையும் ஆட்சியினர் செய்வதில்லை, ஆனல் தமிழ் பிரதேசங்களில் நடைபெறும் தட்டமிட்ட குடியேற்றம் உடனிருந்து கொல்லும் வியாதியைப் போன்றது. இதைத் தமிழ் மக்கள் உணர்ந்து உள்ளத்தில் கொள்ளல் வேண்டும்.”

## நாளை நடைபெறும் இல்லப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கனகரத்தின மத்திய மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளைமாலை நடைபெறவிருக்கிறது. நல்லூர்த் தொகுதித் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு.எம்.சிவசிதம்பரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ச)

## “ச.ச. நிலையங்களின் பணிக்கு அரசு உதவவேண்டும்”

(யாழ்ப்பாணம்)

“படிக்கும் ஆற்றலும் சிந்திக்கும் திறனும் ஒருவனிடம் எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அவ்வளவுக்கு அவன் சமுதாயத்தில் மதிக்கப்படுபவனுகவும் நீதிமானுகவும் விளங்குவான். சனசமூக நிலையங்களில் நல்ல அறிவுக்குரிய மனதைப் பக்குவப்படுத்தி, மனிதனைத் தெய்வமாக்கும் பத்திரிகைகள், புத்தகங்களைப் படிக்கும் ஒரு கூட்டத்தைப் பார்க்கின்றோம். நூலறிவு மனிதனை உயர்த்துகிறது. சமுதாயத்துக்குரிய தொண்டர்களாக உருவாக்கிவிடுகிறது. ஒரு வாசிகசாலை முறையாக ஒரு கிராமத்தில் இயங்குமானுல் ஆயிரங் குற்றவாளிகளை - நல்லறிஞர்களாக - நாட்டின் காவலர்களாக ஆக்கிவிடும். ஆதலால் சனசமூக நிலையங்கள் தளராமல் நிமிர்ந்து நின்று பணியாற்ற சூழலும், கிராமமும், அரசும் எல்லா வகையிலும் உதவவேண்டும். கிராமத்தின் கண்களாக இவற்றைப் பாதுகாக்கவேண்டியது யாவரதும் கடமை.”

இவ்வாறு யாழ். நாயன்மார்கட்டு சனசமூக நிலயத்தின் 3வது ஆண்டு நிறைவு விழாவில் தலைமைவகித்துஉரையாற்றுகையில் திரு. கா. இரகுநாதன் குறிப்பிட்டார். இவ்விழா யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி பேச்சி அம்பாள் கோவில் திருவீதியில் நிகழ்ந்தது. விழாவின் பிரதம விருந்தினராக நல்லூர் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம், யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. க. சிவஞானம், வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்) ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

தலைவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

“அறுபத்து மூவர் குருபூசைகளும் நயம்பெற நடந்துவர மேன்மாடியோடு கூடிய திருமடம் ஒன்று இக்கிராமத்தில் இருந்தது. ஆங்கு இத் திருத்தருமம் சிறப்பாக நடந்தது. சிவ தருமங்கள் பல செம்மைபெறப் பேணப்பட்டு வந்தன. இதனுலேயே இக் கிராமத்துக்கு நாயன்மார் கட்டு என்னும் நாமம் அமைந்தது. இச்கிராமத்தில் இற்றைக்கு முப்பதுஆண்டுகளுக்குமுன் ஒரு வாசிகசாலை சிறப்பாக நடந்தது. பின் அதன் வளர்ச்சி குன்றிச் சீர்குலைந்தது. இன்று உள்ள இளைஞர்கள் மீண்டும் துணிவுடன் இப்பணியில் இறங்கி வெற்றியும் கண்டுள்ளனர். அவர்களது ஊக்கத்தை யாவரும் பாராட்ட வேண்டும்.

இக்கிராமத்தில் அன்றைய வாலிபர்கள், அதாவது 1934ம் ஆண்டு அளவில நாயன்மார்கட்டு நல்லிளைஞர் சங்கம் என ஒரு சங்கம் இயங்கி, இவ்வூரிலுள்ள கோயிலுக்கு அரிய திருப்பொருட்களை வாங்கிக்கொடுத்துள்ளனர். அத்துடன் மகேசுவரி வித்தியாசாலை என்னும் ஒரு பாடசாலையைத் தாபித்தற்கு மூலகாரணர்களாக விளங்கியிருக்கின்றனர். எனவே அன்றிலிருந்து இவ்வூர் இளைஞர்கள், மக்களுடைய கல்வி வளர்ச்சியிலும், அறிவுவிருத்தியிலும் உயர்நிலை கிடைக்க அயராது உழைத்துவந்தனர். இன்றைய இளைஞர்களும் இவ்வழி ஒழுகிவரவேண்டும்.

## கல்வி அதிகாரி பாராட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செட்டித் தெரு மெதடிஸ் தமிஷன் தமிழ்வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி அதிபர் திரு. எஸ். முத்தையா தலைமையில் நடைபெற்றது. கச்சாய் மகாவித்தியாலய அதிபர் திரு. ஏ.தர்மலிங்கம் பாடசாலைகொடியை ஏற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். பிரதமவிருந்தினராக நல்லூர் வட்டாரக் கல்விஅதிகாரி திரு. கு. சோமசுந்தரம் கலந்துகொண்டு உரையாற்றினர்.

இது ஒருசிறிய பாடசாலையாக இருந்த போதிலும் விளையாட்டுப்போட்டிகள் கல்லூரிகளின் தரத்துக்கு ஏற்ப நடத்தப்பட்டதை பாராட்டாமல் இருக்க முடியாது என்றும் இங்குநடைபெற்ற போட்டிகளில் கற்பித்தலும் விளையாட்டுடன் சேர்க்கப்பட்டது ஆசிரியர்களின் சிந்தனைத்திறனைத் எடுத்துக்காட்டுகிறது. என்றும் கல்விப்பகுதியின் சார்பில் இதற்காத் நாம் பாராட்டுப் தெரிவிப்பதாகவும் திரு.சோமசுந்தரம் பேசுகையில் குறிப்பிட்டார்.

போர்ட்டிகளில் பச்சை இல்லம் முதலாம் இடத்தையும் முறையே சிவப்பு நீல இல்லங்கள் இரண்டாம் மூன்றும் இடங்களையும் கைப்பற்றின திருமதி தவபாக்கியம் தர்மலிங்கம் நன்றிதெரிவித்துப் பேசினர்.

## சுற்றுப்போட்டி

(வயாவிளான்)

புன்னலைக்கட்டுவன் பிளையிங் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழகம் ஆகஸ்ட் மாத நடுப்பகுதியில் கரபந்தாட்ட சுற்றுப் போட்டியினை நடாத்தவிருக்கிறது. மின்னொளியில் நடாத்தவிருக்கும் இச்சுற்றுப்போட்டி ஒவர்-கேம், செற்-அப் என இரண்டு பிரிவுகளாக நடாத்தப்படும். இப்போட்டியில் வடமாகாணத்தில் உள்ள கழகங்கள் பங்குபற்றவிருக்கின்றன.


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

உடுவில் இராமுப்புலம் புகையிலைத் தோட்டம் பரப்பு 4 விற்பனைக்குண்டு. கிணறு லொறிப்பாதையும் உண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 9853, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9853

பல இன வளர்ப்பு மீன்கள் மலிவாக விற்கப்படும். அ. சுதேந்திரன், பிறஸ் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 9855

### நினைவாஞ்சலி

ஸ்ரீ. கா. சி. செல்லப்பா (தைப்பிங் சேவையர் இலாகா, மலேசியா)(செல்லர்-வறுத்தலைவிளான், தெல்லிப்பழை) (கடையப்பா - பல்லுக்கட்டியர்-நல்லூர) இன்று (21-7-1978) உங்கள் நூறுவது பிறந்த தினத்தில் சொர்க்கத்தில் கொண்டாட இறைவனை வாழ்த்துகிறோம். செல்லமுத்து செல்லப்பா (மனைவி) கா. சி. செ. முத்துக்குமாரு (நிர்வாகஸ்தர் - ஏ. சி, எஸ். தொகுதி ஸ்தாபனங்கள் - 121, முதலாம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம், தொலைபேசி; 7460) திருமதி தனேஸ்வரி முத்துக்குமாரு, மற்றும் ஜெயலக்ஷிமி, இராதாகிருஷ்ணன், மகாலக்ஷிமி, ஜனலக்ஷிமி, கோபாலகிருஷ்ணன், அனந்தகிருஷ்ணன், சௌந்தரகிருஷ்ணன், முதலாம் கட்டை, மானிப்பாய் வீதி, உடுவில். 9846

### பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற யாழ்ப்பாணம் சுண்டிக்குளி ஸ்ரீ நிவாசகம் மகள் காமாட்சியின் மரணச்சொத்து விடயத்தில் வழக்கு: இல. த/3384

காலஞ்சென்றவர்

கு. வன்னியசிங்கம் கைம்பெண் கோமதி வன்னியசிங்கம் 47, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்

மேலே சொல்லப்பட்ட காலஞ்சென்றவரின் மரணச் சொத்துக்குத் தத்துவம் கோரி மேற்படி நீதிமன்றத்தில் மேற்படி இலக்கம் கொண்ட தத்துவ வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதென்றும் அதன்பேரில் பின்னுறுதிக்கட்டளை விதிக்கப்பட்டுள்ளது என்றும் இத்தால் தெரியப்படுத்தப்படுகிறது.

அக்கறையுள்ளவர் யாராயினும் இருந்தால் 1978-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ந் திகதி முற்பகல் 10 மணிக்கு இந்த நீதிமன்றத்தில் தோன்றி பின்னுறுதிக்கட்டளையை ஏன் உறுதிப்படுத்தக்கூடாது என்று காரணம் இருந்தால் இத்தால் காட்டும்படி கேட்கப்படுகிறார்.

1978-ம் ஆண்டு ஜூலை மாதம் 18-ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி ஒப்பம்

பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.
9858

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
### ஏலவிற்பனை

26-7-78-ந் திகதி காலை 9-00 மணிக்கு மின்சாரக் களஞ்சியத்தில் பாவித்துக் கழிக்கப்பட்ட பழைய செம்புக் கம்பிகள் ஜீ. ஐ. குழாய்கள், அலுமினிய மின்விளக்கு மூடிகள் முதலிய பல பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். கூடிய கேள்விக்காரர் பணத்தை உடனடியாகச் செலுத்திப் பொருட்களை எடுத்துச் செல்லவேண்டும்.

க. சிவஞானம்,
ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்,
18-7-78, 9860

### நகராட்சி மன்றம், சாவகச்சேரி
### ஆதனவரி அறிவித்தல்

1978-ம் ஆண்டு 2-ம் கந்தாயத்திற்குரிய ஆதனவரி செலுத்துவதற்கு 31-7-78-ம் திகதி வரை கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளது, ஆகவே நீங்கள் செலுத்தவேண்டிய வரிகளை 31-7-1978-ந் திகதி பகல் 12-00 மணிக்கு முன்பாக சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ள வேண்டும். தவறின் ஆதனவரியுடன் பத்து வீதம் பற்றுணைப் பணமும் சேர்த்து அறவிடப்படும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

த. நவரத்தினராசா,
விசேட ஆணையாளர்,
நகரசபை,
சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
18-7-78. 9857

### திருத்தம்

கொன்சல்ரன்சி அன்ட் (f) பினன்ஸ் அன்ட் டிவலப்மென்ற் லிமிட்டெட்டின் 13-7-78 அறிவித்தலில் அறிக்கை முதலியவற்றின் விலை ரூபா 5/- எனத் திருத்திப் படிக்கவும். ஏற்கனவே ரூபா 3/- அனுப்பியவர்கள் மிகுதிப் பணத்தை அனுப்ப வேண்டப்படுகின்றனர். 9859

### பின்போடப்பட்டுள்ளது

பண்டத்தரிப்பு செபமாலைமாதா சனசமூகநிலையத்தின் ஆதரவில் 23-7-78ல் நடைபெறவிருந்த நிதியுதவிக் காட்சி 27-8-78க்குப் பின்போடப்பட்டுள்ளது.
9864 நிலயத்தினர்.

ஈழநாடு
The Eelanaadu

## ஆட்சியில் ஓராண்டு

நாளை சனிக்கிழமை ஜூலை இருபத்தியிரண்டாம் நாள் இலங்கையின் சமீப காலச் சரித்திரத்தில் மிக முக்கியமான நாள்.

பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சிக்கு வந்து புதியஅரசியலமைப்பை உருவாக்கிப் புதிய குடியரசு அமைப்பையும் கொண்டு வந்த முன்னைய அரசாங்கம் தன்னைத் தட்டிக்கேட்க ஆளில்லை என்று நினைத்து நடந்ததையே மாற்றி அமைத்த முக்கியமான தினமும் இதுவாகும்.

சென்றவருடம் அதாவது 1977ம் ஆண்டு இதேநாளில் தான் பொதுத் தேர்தலில் மூன்றில்நான்கு மிகப்பெரும்பான்மையான ஸ்தானங்களைப் பெற்றுக்கொண்ட திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனாவின் தலைமையிலான ஐக்கியதேசியக்கட்சி ஆட்சி பீடத்திற்கு வந்தது.

இத்தினத்தில்தான் திரு. ஜே. ஆர் ஜயவர்த்தனா இலங்கையின் பிரதமராகப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

ஆட்சிபீடத்துக்கு வந்த பிரதமர் திரு. ஜயவர்த்தனா பொதுவாழ்விலும் தனிப்பட்ட வாழ்விலும் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பவர் என்று பெயர் பெற்றவர்; எதற்கும் உணர்ச்சிவசப் படாதவர்; நிதானமாகச் செயல்படுபவர்.

ஆட்சிக்கு வந்ததும் பேரவை உறுப்பினர்கள், பிரதியமைச்சர்கள், அமைச்சர்கள் ஆகியோர் கடைப் பிடிக்கவேண்டிய ஒழுக்க நெறிக்கோவையொன்றைத் தயாரித்தளித்தார்.

இந்நாட்டில் வாழும் சகல மக்களும் இன, மத ஜாதி பேதமின்றி வாழவேண்டும் என்ற இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கு திரு. ஜே. ஆர். பிரதமராக இருந்த போதிலும் பின்னர் செயலதிகாரம் கொண்ட ஜனாதிபதியான பின்னரும் செயலில் நிறைவேற்றுவதற்கு முயற்சிசெய்து வருகிறார்என்பதில் ஐயமில்லை.

ஆனால் கடந்த தேர்தல் காலத்தில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை எந்த அளவுக்கு நிறைவேற்றுவதில் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா தலைமையிலான அரசு வெற்றிபெற்றுள்ளதென்ற கேள்வி ஓராண்டு பூர்த்தியடையும் இச்சமயத்தில் மக்கள் மத்தியில் எழுவது இயல்பு.

விலைவாசி உயர்வைக் குறைப்போமென்றும், வாழ்க்கைச் செலவுப் பளுவை நீக்குவோமென்றும் ஆட்சிக்கு வந்ததும் பல வாக்குறுதிகளை அளித்த அமைச்சர்கள் பின்னர் ஒன்றுக்கொன்று முரணாகப் பேசி வருவது மக்கள் உணர்ந்து கொள்ளாததல்ல.

ஒரு றாத்தல் மாவின் விலை அறுபதுசதமாகக் குறைக்கப்பட்டபோது மாவின் விலை மேலும் குறைக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டதைக் கேள்வியுற்ற மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். ஆனால் இப்போது மாவின் விலை இருபது சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. மருந்துகளின் விலை குறையுமென்று எதிர்பார்க்கப்பட்டதற்குப் பதிலாக அவை அதிகரித்துள்ளன. பால்மாவின் விலையும் மற்றும் சகல பொருள்களின் விலைகளும் உயர்ந்துள்ளன.

பொருள்களுக்குத் தட்டுப்பாடில்லை. சகல பொருள்களும் கடைகளிலும் நடைபாதை வியாபாரிகளிடமும் குவிந்துகிடக்கின்றன.

ஆனால் இவை சாதாரண பொதுமக்களுக்குக் கிடைக்க முடியாதபடி உச்சவிலையிலிருக்கின்றன.

விலையேற்றத்தைச் சமாளிக்க, அரசாங்க, கூட்டுத்தாபன, தனியார் துறை ஊழியருக்குச் சம்பளஉயர்வாக விசேஷ அலவன்ஸ் வழங்கப்பட்டிருக்கின்றது உண்மையே. மேலும் சம்பள உயர்வு அளிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தனியாகத் தொழில் செய்பவர்களும் நாளாந்த கூலிவேலை செய்பவர்களும் என்ன செய்வர்?

சம்பளஉயர்வினால் மேலும் விலைவாசி அதிகரிக்குமே தவிர விலைவாசிகுறையாது.

விலைவாசியைக் குறைத்து வாழ்க்கைச் செலவுப் பளுவை நீக்குவதற்குரியநடவடிக்கைகளைஅடுத்தவருடத்திலாவது மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

ஆட்சிக்கு வந்து ஓராண்டு தானே இன்னும் ஐந்துவருடங்களிருக்கிறதென்று சொல்லலாம். ஆனால்முன்பு ஆட்சிபீடத்திலிருந்தவர்களும் இதையேதான்நினைத்திருந்தார்கள். கடைசிநேரத்தில் ஏதேதோ சலுகைகள் வசதிகள் செய்யப்பட்டன.

ஆனால் முதலில் பட்டகஷ்டங்களை மக்கள் மறந்துவிடுவதில்லையென்பது சென்ற தேர்தலில் தெரிந்துகொண்ட படிப்பினை.

யாழ். மாவட்டத்தில்

# மரவேலை பயிற்சிப் பாடசாலைகள்

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(பண்டத்தரிப்பு)

அரசாங்கசிறுகைத்தொழில் திணைக்களத்தினால் யாழ். மாவட்டத்தில் இரு இயந்திர சாதன மரவேலைப் பயிற்சிப் பாடசாலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

யாழ். நகரிலும், மானிப்பாயிலும் நிறுவப்படவுள்ள இந்த மரவேலை பயிற்சி பாடசாலைகளில் சேர்ந்து பயிற்சி பெறுவதற்கான விண்ணப்பங்கள் கச்சேரியிலுள்ள சிறு கைத்தொழில்பகுதியினரால் கோரப்பட்டுள்ளன.

14 வயதுக்கும் 21 வயதுக்கும் இடைப்பட்ட[illegible]ர்கள் 8-ம் வகுப்பு கல்வித் தராதரத்துடன் இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

## பேருந்து பிரயாணிகள் சங்கம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்ட வல்வை பேருந்து பிரயாணிகள்சங்கம் நிர்வாகிகள் விபரம்வருமாறு.

தலைவர் பா. லிங்கமூர்த்தி, உபதலைவர் இ. சத்துரு சங்காரவேல், செயலாளர் வ. அ. தங்கவேலாயுதம், உபசெயலாளர் பா. பாலேந்திரன், பொருளாளர் இ. நடனசிகாமணி நிர்வாகசபை உறுப்பினர்களாக செ. யோகச்சந்திரன், பொ. சிவஞானசுந்தரம், மு. பிரேம்குமார், ச. [illegible]ரவராசா, வே. விமலநாதன், த. சக்திவேல் ந. சிதம்பரநாதன், அ. மனோசரன். (இ)

## மணிவாக்கு

யுத்தகளத்தில் ஏற்படும் வெற்றியைவிட சமாதானத்துக்கான முயற்சிகளில் ஏற்படும் வெற்றிகள் மேலானவை.

--அசோகசக்கரவர்த்தி

## தமிழர் அபிவிருத்திச்சபை அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியையும், தமிழ்ப் பிரதேசங்களில் அபிவிருத்தியடையாத பகுதிகளையும், அபிவிருத்தி செய்வதற்கென 'தமிழர் அபிவிருத்திச்சபை' என்று புங்குடுதீவு இளைஞர் கழக மண்டபத்தில் ஒரு புதிய சபை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இச்சபையை காவலூர் எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம். சட்டத்தரணி திரு. ஆ. க. நடராசா தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இச்சபை குடிநீர் விநியோகத்தை சீரமைத்தல், குளங்களை ஆழமாக்குதல். புதுப்பித்தல், வேலையில்லாப் பிரச்னையைத்தீர்த்தல்; இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி அளித்தல், பட்டினி ஒழிப்பு, அகதிகள், அங்கவீனர்கள், அநாதைகள் நலம் பேணல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும்.

இச்சபையை அங்கீகரிக்கப்பட்ட பொது நிறுவனமாக மாற்றுவதற்கு பண்டிதர் கா. பொ. இரத்தினம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவாகினர். தலைவர்: ஆ. ச. நடராசா, உபதலைவர்கள்: தி. சதாசிவம், வே. க. ஏரம்பு; பொதுச் செயலாளர்: வி. எஸ். சிவலிங்கன், உதவிச்செயலாளர்கள்: க. மகாலிங்கம்; மு. நடேசு; பொருளாளர்: க. திருச்செல்வம். (கெ-உ)

## சாராய வேட்டையில் மூவர்கைது

(பண்டத்தரிப்பு)

சங்கானை பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி திரு. ரி. ஜே. மிஸ்கின் தலைமையில் சென்ற பொலிஸ் கோஸ்டினர் இளவாலைப்பகுதியிலுள்ள வீடொன்றில் வைத்து சாராயம் விற்றதாக வாலிபர் ஒருவரை கைது செய்தனர் அதேஇரவு சுழிபுரத்திலுள்ள பெரியபுலோ என்னுமிடத்தில் வீட்டில் வைத்து சாராயம் விற்றதாக பெண் ஒருவரை கைது செய்தனர். அத்துடன் அங்கிருந்து பெருந்தொகையான கள்ளச்சாராயத்தையும் பியர் போத்தல்களையும் கைப்பற்றினர்கள். அதே இரவு சண்டிலிப்பாயிலுள்ள வீடொன்றிலும் கள்ளச்சாராயம் வைத்து விற்றதாக பெண்ஒருவரை கைதுசெய்ததுடன் சாராயத்தையும் கைப்பற்றினர்கள்.

இரகசியமாக வீடுகளில் வைத்து சாராயம் விற்பவர் பற்றிய தகவல்களை பொது மக்கள் தந்துதவினால் நடவடிக்கை எடுக்க முடியும் என்று சங்கானைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக பதவி ஏற்றுள்ள திரு. ரி. ஜே. மிஸ்கின் தெரிவித்தார்.

## பன்னிருகை வேலவனே கதிர்காமக் கந்தா

தீமைமிஞ்சிப் பலாத்காரம் தலையெடுத்துத்
தேவர்--நரர் சிறைப்புட்களாய்த் தவித்து
ஆமைகளாய் ஐம்புலன்க ளொடுக்கி வாழ்வில்
அல்லலுற்றுக் கண்களினீ ராருயோட
ஊமைகளாய் இறையொன்றே தஞ்சமென்று
உணர்ந்துரைக்க... உலகத்தின் இருளைநீக்கும்
நேமமுறு வழியெதன்றீ சன்சிந்திக்க
நெற்றிக்கண் திறந்து பொறிபறந்த தாமால்!

ஞானக்கண்ணால் விழுதீப் பொறிகளாலும்
நாநிலத்தைப் பொசுக்குமென வுமையாளஞ்சி
தானத்தீப் பொறிகடமை யுதரத் தேற்றுத்
தற்காத்துக் குளிராக்கிச் சின்னாள்ன்பின்...
தேனமுதப் புனல்பாயும் கங்கைதன்னில்
சீராகவிட... அவைகள் ஊர்ந்துசென்று
ஞானநிறை குழந்தைகளா யுருவந்தாங்கி
நல்ல சரவணப்பொய்கை கிடந்ததாமால்!

கிடந்திடுமக் குழவிகளைக் குளிக்கச் சென்ற
கிருத்திகை நங்கைகளறுவர் கண்டே இன்பம்
அடைந்தோராய் ஆளுக்கொன்றாய்த் தூக்கிப்போய்
ஆதரவாய் வளர்க்கையிலே; ஓர்நாள் ஈசன்
இடப்பாகச் சக்தியும் சென்றந்தப் பெண்கள்
இடமிருந்த குழவிகளாறினையும் வாங்கி
அடக்கவொணாப் பெருமகிழ் வோடரவணைக்க
அவைகளுட னொருமகவா யாயிற்றாமால்!

ஒருமகவாய் ஆறுமுகம் பன்னிர்கைகள்
உடலொன்று கால்களிரண்டாய்... இவ்வாறு
உருவடைந்து இளமதியாய் வளர்ந்தே இந்த
உலகத்தில் அரக்கரெனுந் தீயபண்பைக்
கருவறுக்கப் பழநி, செந்தூர், தணிகை. ஈழக்
கதிர்காமத் தோடு திருப் பரங்குன்றத்தும்
திருவேர கத்தும் அறுபடை வீடுற்றுத்
தின மருள் செய் எனது கவித்துதி சேர் கந்தா!

-( வன்னியூர்க் கவிராயர் )-

## தந்தருளே தார்மீக சமுதாய சக்திதனை

கதிரீட்டிக் கலைகூட்டிக் கருணைமழைக் கனிவூட்டி
பதிநாட்டிப் பலமூட்டிப் பரந்துவரும் நதிகாட்டி
துதிகூட்டும் அருளீட்டித் தொடர்மலைகள் எழுகாட்டி
விதியாட்ட வினையோட்ட விழிசெய்தாய் வேலவனே!

வேலவனே தென்கதிரை வீடுடைய மேலவனே
கோலமுயர் குன்றினிலே கூத்தாடும் கூர்வடிவே
நீலமயில் வாகனனே நித்தியனே நீளுலகின்
காலநயம் கண்ணியத்தைக் காட்டச்செய் காவலனே!

காவலனே காவடிகொள் காட்சியனே கண்மணியே
ஆவலுடன் ஓடிவரும் அன்பர்தமக் கன்புளனே
பாவலனே ஞானநெறிப் பாதைகளே பாரதனில்
ஆவதற்கு ஆதரவை ஆறுமுகா தந்தருளே!

தந்தருளே தார்மீக சமுதாய சக்திதனை
தந்தைதனக் குபதேசம் தந்தவனே சண்முகனே
நிந்தனையும் வஞ்சனையும் நேர்பயமும் நீங்கியொரு
பந்துமித்தி ரர்உறவைப் பாங்குறச்செய் பாவலனே!

பாவலனே பக்திரசம் பண்பாடு மேலோங்கிச்
சீவகிம்சை பொய்களவு தீய்ந்தழிந்து தேசுமிகும்
சேவைதனில் பேதமின்றிச் சீலமுடன் மக்களெல்லாம்
கோவில்குளம் மன்றுகளில் கூடவருள் செய்குகனே!

குகனே உனதுஎழிற் கோலத்தைக் கண்ணுற்றே
அகமே மகிழ்ந்தென்றும் ஆனந்தக் கூத்திடுவோம்
தகவார் தருமநிலை தார்மீகத் தண்மைநிலை
இகநேர் இடங்கொள்ள என்றுமிதம் செய்முருகா!

( அரியாலையூர் வே. ஐயாத்துரை )

## சக்தி எமக்களிப்பாய்! திருமுருகா!!

மக்கள் குறை தீர்க்கும் மாவைத் திருமுருகா
சக்தி எமக்களிப்பாய் நன்றாக -- எக்கணமும்

எங்கள் மொழி; மண்ணை எவர்க்கும் பறிகொடாது
இங்கெம்மைக் காத்திடுவாய இனிது.

---இணுவை ந. சண்முகப்பிரபு

## அருணோதயா அபிவிருத்தி

(பண்டத்தரிப்பு)

அளவெட்டி அருணோதயர்க் கல்லூரி கல்வி அபிவிருத்திக்கும் புதிய வகுப்பறை மண்டபம் அமைப்பதற்கும் நிதி திரட்டி வழங்குவதற்கு கொழும்பிலுள்ள "அளவெட்டிஅருணோதயக் கல்லூரி அபிவிருத்திக்கழகம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

அண்மையில் நடைபெற்ற இக்கழகத்தின் பொதுக்கூட்டத்தில் இதற்கான நிதி சேகரிப்பில் ஈடுபடுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# ஹிந்தி திணிப்பை கிளர்ச்சி மூலம் தீர்க்க முடியாது

## தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். நம்பிக்கை

சென்னை, ஜூலை. 20

தென் மாநிலங்களில் ஹிந்தி மொழியைத் திணிக்க மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு எதிராக கிளர்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இப்பிரச்னைக்குத் தீர்வு கண்டு விடமுடியாது.

இவ்வாறு தமிழக முதல்வர் திரு, எம். ஜி. இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

தென்மாநிலங்களில் ஹிந்தி திணிக்கப்படுவதை சமரசப் பேச்சுவார்த்தைகள் மூலம் தடுக்கமுடியுமென்று தாம் பூரணமாக நம்புவதாகவும் திரு. இராமச்சந்திரன் கூறினார். (இ)

எகிப்தின் ஆலோசனைகளை

## இஸ்ரேல் ஏற்க மறுத்தால் மேலும் பேச்சுவார்த்தைஇல்லை

### எகிப்திய அதிபர் அறிவிப்பு

கெய்ரோ, ஜூலை. 20

மத்திய கிழக்கு பிரச்னை குறித்து இஸ்ரேலிய - எகிப்து வெளிநாட்டு அமைச்சர்களிடையே நடைபெற்ற 2நாள் பேச்சுவார்த்தைகள் அமைதிப் பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்த நல்லதொரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ள போதிலும் எகிப்து அண்மையில் சமர்ப்பித்துள்ள யோசனைகளை இஸ்ரேல் ஏற்காவிடின் அமைதிப் பேச்சுக்கள் தொடர்ந்து நடத்தப்படமாட்டாது.

இவ்வாறு எகிப்திய அதிபர் ஜனுப் அன்வர் சதாத் தெரிவித்துள்ளார்.

அதே வேளையில் மத்திய கிழக்கு அமைதி குறித்து இஸ்ரேல் தெரிவிக்கும் புதிய யோசனைகளையும் ஏற்க எகிப்து தயாராக உள்ளதென்றும்தெரிவித்த ஜனுப் சதாத், பாலஸ்தீனமக்களின் உரிமைக்கு உத்தரவாதம் அளிக்கப்படாவிட்டால்மத்தியகிழக்கில்என்றுமே அமைதி ஏற்படப்போவதில்லை என்றும் கூறினார். (இ)

## “சமூகமுன்னேற்றத்துக்கு உழைத்தவர்”



(யாழ்ப்பாணம்)

“சீவல் தொழிலாளர் நலன் கருதி இச்சமூக முன்னேற்றத்துக்காக அச்சுவேலியில் கள் உற்பத்திச் சங்கம் ஒன்றை முதன்முதல் உருவாக்கியவர் திரு. எஸ். மாணிக்கம். வலி. கிழக்கு வடபகுதி தெங்கு பனம் பொருள் உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்தலைவராக இவர் இருந்த பொழுது 1973-74 முடிவில் 89,000 ரூபா சுத்த லாபமாகக்காட்டினார். தொழிலாளர்களுக்கு இருமுறை போனஸ் பணம் வழங்கப்பட்டது. சமூக முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டுழைத்தார்.”

அச்சுவேலி வலி. கிழக்கு வடபகுதி தெங்குபனம் பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில், சங்கத்தின் தலைவராகக் கடமை புரிந்து ஓய்வு பெற்ற திரு. எஸ். மாணிக்கத்தின் உருவப் படத்தை திரைநீக்கம் செய்து வைத்துப் பேசுகையில், கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. தி. நவரத்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. நவரத்தினம் தலைமையில் நடந்த இப்பாராட்டுக் கூட்டத்தில் சங்கப் பொது முகாமையாளர் திரு. கு. கணேசன், தொழிலதிபர் திரு. பொ. வன்னியசிங்கம், உட்படப் பலர் உரையாற்றினர். திரு. எஸ். மாணிக்கம் நன்றி தெரிவித்துப்பேசினார்.

## இன்று நடைபெறும் தவில் கச்சேரி

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி, வாய்க்காற்தரவைப்பிள்ளையார் கோவில் பூங்காவனத் திருவிழா இன்று நடைபெறும்.

இன்று இரவு இடம்பெறும் விசேட மேளக் கச்சேரிகளின் போது, யாழ்ப்பாணம் வந்துள்ள தமிழக தவில் வித்வான் கலைமாமணி ரி. ஜி. முத்துக்குமரசாமி பிள்ளை, கைதடி பழனிமலை குழுவினருடன் தவில் வாசிப்பார்.

## ஓடு பாதையில் இறங்கத் தவறிய விமானம்..

புதுடில்லி, ஜூலை. 20

76 பிரயாணிகளுடனும் 6 சிப்பந்திகளுடனும் ஜெய்ப்பூர் விமான நிலையத்தில் இறங்கிய ‘போயிங்-737’ விமானம் ஒன்று ஓடு பாதையை விடுத்து அதற்கு அண்மையில் உள்ள ஓரிடத்தில் இறங்கியபோதிலும் விமானிகளும் பிரயாணிகளும் தெய்வாதீனமாக உயிர் தப்பினர் என அறிவிக்கப்பட்டது.

பிரயாணிகளும் விமானிகளும் பின்னர் மீட்பு விமானம் மூலம் புதுடில்லிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (இ)

இந்திரா காலத்தில் அமுலிலிருந்த

# ‘மிஸா’ சட்டம் ரத்து!

## இந்திரா காங்கிரஸும் ஆதரவு

புதுடில்லி, ஜூலை 20

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் ஆட்சிக் காலத்தில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டு பெரும் சர்ச்சைக்குள்ளான உள்நாட்டு பந்தோபஸ்து பராமரிப்பு சட்டம் நேற்று லோகசபையினுல் ரத்துச் செய்யப்பட்டது.

இச்சட்டத்தை ரத்துச் செய்யும் மசோதா லோக சபையில் உள்துறை ஸ்டேட் அமைச்சரினல் சமர்ப்பிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்திரா காங்கிரஸ் உட்பட சகல எதிர்க்கட்சிகளும் இம்மசோதாவை ஆதரித்துப் பேசினர்.

அவசர காலச் சட்டத்தின்கீழ் 1971-ம் ஆண்டு அமுல் செய்யப்பட்ட இச் சட்டத்தின் மூலம் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப் பட்டிருந்தது தெரிந்ததே. (இ)

## தென்மராட்சி இளைஞர்களுக்கு வேலை வங்கிப் பத்திரம்

(மட்டுவில்)

சாவகச்சேரி எம். பி, திரு. வி. என். நவரத்தினம் சுமார் 500 வேலை வங்கிப் பத்திரங்களை, தென்மராட்சி உதவி அரசாங்க அதிபருக்கு வழங்கியுள்ளார். இதன் பயனுக, தென்மராட்சிப் பகுதியிலுள்ள பல ஏழை இளைஞர்கள் பலனடைவார்கள்.

மொரார்ஜியின் மகன்மீதான

# ஊழல் குற்றத்தை மூடிமறைக்க முயற்சி

## கோரிக்கை நிராகரிப்பு

புதுடில்லி, ஜூலை. 20

இந்தியப்பிரதமரின் மகன் மீதான ஊழல்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அண்மையில் உள்துறை அமைச்சருக்கும் பிரதமருக்குமிடையே நடந்த கருத்துவேறுபாடுகள் சமரசப் பேச்சுவார்த்தைகள்மூலம்மூடி மறைக்க முயற்சி எடுக்கப்படுகிறது.

இவ்வாறுஇந்திராகாங்கிரஸ் எம். பி. திரு. ஏ. பி. ஷர்மா ராஜ்யசபையில் குற்றம் சாட்டினார்.

ஜனதா கட்சிக்குள் நெருக்கடி தோன்றியிருந்தவேளையில் மேற்குறிப்பிட்ட ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக 20 நாட்களில் பிரதமருக்கும் உள்துறைஅமைச்சருக்குமிடையே பரிமாறப்பட்ட கடிதங்களைப்பொதுமக்களின் பார்வைக்காக பகிரங்கமாக வெளியிடவேண்டும் என்று ராஜ்யசபையில் கோரிக்கை விடுத்தபோதே திரு. ஷர்மா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விவகாரம் குறித்து 20 நாட்களில் பிரதமருக்கும் உள்துறை அமைச்சருக்குமிடையே ஆறுகடிதங்கள் பரிமாறப்பட்டன என்று திரு. ஷர்மாதெரிவித்தார்.

திரு,ஷர்மாவின் கோரிக்கை ராஜ்யசபையினுல் நிராகரிக்கப்பட்டது. (இ)

## சுகாதாரஅமைச்சர் யாழ். விஜயம்

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாணம் கைதடிஆயுர்வேத வைத்தியசாலை உள் நோயாளர் பிரிவு, அடுத்த மாதம் 11-ம் திகதி சுகாதார அமைச்சர் காமினி ஜெயசூரியாவினுல் சம்பிரதாய முறைப்படி திறந்து வைக்கப்படும்.

இத்திறப்புவிழா சம்பந்தமாக ஒரு ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. ஆயுள்வேத ஆணையாளர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணண்டோ தலைமையில் நடைபெற்றஇக்கூட்டத்தில் ஆயுள்வேத சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

அமைச்சரின் விஜயம் சம்பந்தமாக ஆலோசிக்கப்பட்டு நிகழ்ச்சி ஒழுங்கும் தயாரிக்கப்பட்டது.

# குளம் ஆழமாக்க 75,000 நிதி ஒதுக்கீடு

(பண்டத்தரிப்பு)

தமது தொகுதியிலுள்ள கண்ணகை அம்மன்குளத்தை ஆழமாக்கி அபிவிருத்தி செய்வதற்காக மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் 75,000 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

மழைகாலம் ஆரம்பிக்கு முன்னர் ஆகஸ்ட் மாதத்திற்கு முன்பாக இக்குளத்தை ஆழமாக்கும் வேலைகளை தொடங்குமாறு திரு. தர்மலிங்கம் நீர்ப்பாசன நெடுஞ்சாலை அமைச்சரைக் கேட்டுள்ளார். (உ)

## பஸ்ஸுக்கு பாதுகாப்பு

(வவனியா)

பரந்தன்-முல்லைத்தீவு வீதியில் நடக்கும் பஸ்வழிப்பறிக் கொள்ளைகளை தடுக்குமுகமாக பொலிசார் இ. போ. சவுடன் சேர்ந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

முதல் நடவடிக்கையாக பரந்தனிலிருந்து முல்லைத்தீவிற்கு செல்லும் கடைசி இரவு பஸ்ஸுக்கு ஆயுதம் தாங்கிய பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. கடந்தவாரம் சுதந்திரபுரத்தில் நடைபெற்ற பஸ் கொள்ளையை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ‘அமிர்’ கலந்துகொள்ளும் கூட்டுறவாளர்தினம்

(பண்டத்தரிப்பு)

அளவெட்டி மல்லாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவாளர் தினவிழா 23ம் திகதி அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் பிரதம அதிதியாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் கலந்துகொள்வார்.

கூட்டுறவாளர்தினவிழாவையொட்டி பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி, மரதன் ஓட்டப்போட்டி, சைக்கிள் ஓட்டப்போட்டி ஆகியனவும், நடனம், நாடகம் ஆகிய போட்டிகளும் நடைபெறவுள்ளன. (இ)

மாநில அரசுகளுக்கு

# சுயாட்சி அதிகாரம் ஜெயப்பிரகாசர் ஆதரவு

பாட்ன, ஜூலை. 20

இந்திய மாநிலங்களுக்கு மேலும் சுயாட்சி அதிகாரங்களை வழங்கவேண்டும் என்று சர்வோதயத்தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் தெரிவித்துள்ளார்.

மத்திய-மாநில அரசுகளின் உறவு குறித்து புதுடில்லியில் நடைபெற்ற மகாநாட்டுக்கு அனுப்பியுள்ள செய்தியிலேயே திரு. ஜெயப்பிரகாஷ் மேற்கண்டவாறு கூறினர்.

மாநிலங்களுக்கு அதிக சுயாட்சி அதிகாரங்கள் வழங்கப்படும் அதே வேளையில் இரு அரசுகளுக்குமிடையே ஒற்றுமை பாதிக்கப்படக்கூடாது என்றும் அவர் தமது செய்தியில் தெரிவித்துள்ளார். (இ)

## தங்கப் பதக்கம்

(தெல்லிப்பளை)

லயன்ஸ் கழகத்தால் நடாத்தப்பட்ட அகில இலங்கை கட்டுரைப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன்கல்லூரி மாணவி செல்வி வே. ரஞ்சனி முதலாம் பரிசிற்குரிய தங்கப்பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

# வாய்க்குள் சேலையைத் திணித்து குப்புறவிழுத்திய திருடர்கள்

## "என்மீது ஏறிநின்று துள்ளினர்!"

### நாரந்தனை கொள்ளை வழக்கில் வயோதிபமாது

(வண்ணார்பண்ணை)

"எனதுவாய்க்குள் சேலையை திணித்து, எனது கைகளைக் கட்டி குப்புறவிழுத்திய திருடர்கள், என்மீது ஏறிநின்று துள்ளினர்."

இவ்வாறு, ஊர்காவற்றுறை நீதிபதிமுன் விசாரணைக்கெடுக்கப்பட்ட கொள்ளை வழக்கொன்றில், வழக்காளியான வயோதிபமாது பேதுருப்பிள்ளை கைம்பெண் எலிசபேத் தமது சாட்சியத்தில் தெரிவித்தார்.

நாரந்தனையைச் சேர்ந்த பேதுருப்பிள்ளை எலிசபேத் என்பவரது வீட்டில் புகுந்து இவருக்குச் சொந்தமான சேலைகளையும், நகைகளையும், பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றதாக யாழ்ப்பாணத்தை சேர்ந்த சவரிமுத்து செல்வம், முதியான்சே ராசபக்ச ஆகிய இருவருக்கெதிராக ஊர்காவற்றுறைப் பொலிசாரால் இவ்வழக்கு தாக்கல்செய்யப்பட்டிருந்தது. வீட்டில் புகுந்து கொள்ளையடித்ததாகவும், கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களை வைத்திருந்ததாகவும் முதலாம் எதிரிமீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. வயோதிபமாது எலிசபேத் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"இரவு 2 மணியிருக்கும். கோழிகள் மரத்திலிருந்து பறக்குச் சத்தம் கேட்டது. நான் டோர்ச் லைட்டுடன் வெளியில் சென்றேன். என்னை ஒருவர் தொண்டையில் நெரித்து டோர்ச்லைட்டைப் பறித்து முகத்தில் பலதடவை அடித்தார். பின் வாய்க்குள் துணியைத் திணித்துக் கைகளைக் கட்டி, என்னைக் குசினிக்குள் இழுத்துச் சென்று குப்புற விழுத்தி என்மீது ஏறிநின்று துள்ளினர். அப்பொழுது கதவருகில் இன்னொரு கறுத்த மனிதர் நின்றதையும் கண்டேன். பின் இருவரும் வீட்டினுள் சென்றுவிட்டனர். இதன் பின் எனது வாயால் கைக்கட்டுகளை அறுத்துக் கொண்டு அடுத்த வீட்டுக்குச் சென்று அவர்களைக் கூட்டி வந்தேன். வீட்டைப் பார்த்தபோது சேலைகள், நகைகள் பணம் போன்றவற்றைக் காணவில்லை."

அடையாள அணிவகுப்பின் போது கைகளைக் கட்டி விழுத்தியவர் இரண்டாம் எதிரி என்று அடையாளம் காட்டப்பட்டது. இதைத் தொடர்ந்து சான்றுப் பொருட்களை மீட்ட பொலிஸ் உத்தியோகத்தர் திரு. பரமநாதன் உட்படப் பலர் சாட்சியமளித்தனர்,

எதிரிகள் தரப்பில், 1ம் எதிரி எதிரிக்கூட்டில் நின்று உாக்குமூலமளித்தார். இரண்டாம் எதிரி சாட்சிக்கூட்டில் நின்று வாக்குமூலமளித்தார். எதிரிகள் தமக்காகத் தாமே வழக்காளிகளைக் குறுக்குவிசாரணைசெய்தனர்.

வழக்காளி தரப்பில் ஊர்காவற்றுறைப் பொலிசாரின் உதவியுடன் சட்டத்தரணி ந. ஸ்ரீகாந்தா ஆஜரானார். எதிராளிகளின் சாட்சியங்களின் பின் இருவரும் குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ளதாக தெரிவித்த நீதிபதி, தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார் இவ்வழக்கில் எதிரி ஒருவரால் மீட்டுக் கொடுக்கப்பட்டதாகக் கூறப்பட்ட 13 சான்றுப் பொருட்கள் பொலிசாரால் சமர்ப்பிக்கப்பட்டன.

## ஒன்றிணைப்புக் கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

இணுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை நடாத்தும் ஒன்றிணைப்புக் கல்விக் கண்காட்சியும், கலைவிழாவும் எதிர்வரும் 23, 24ம் திகதிகளில் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

மாடிக் கட்டிடத்துக்கான அடிக்கல்நாட்டு விழாவும் 23ம் திகதி மாலை நடைபெறும். மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் அடிக்கல்லை நாட்டுவார்.

பிரதம விருந்தினர்களாக வட மாநில கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர், தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.

உடுவில் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. சனஞ்செயன் விழாவுக்குத் தலைமைதாங்குவார். 23ம் திகதி இரவு திறந்துவைக்கப்படும் பொருட்காட்சியை 24ம் திகதி காலை 9-00 மணி தொடக்கம் பிற்பகல் 4-00 மணிவரை கண்காட்சியை அனைவரும் பார்வையிடலாம். ஒன்றிணைப்புக் கண்காட்சியைத் திரு. தி. மாணிக்கவாசகர் திறந்துவைப்பார். மாணவர் நூல் நிலையத்துக்கான அடிக்கல்லை பிரபல நாவல் எழுத்தாளரும், இணுவில் இந்துமகாசபைத் தலைவருமான திரு. கே. எஸ். ஆனந்தன் நாட்டுவார்.

பண்டிதர் சபா. ஆனந்தன், அதிபர் திரு. கே. சோதிப்பெருமாள், பெற்றூர் ஆசிரியர் சங்க நிர்வாக உறுப்பினர் திரு. சி. சிவபாலசிங்கம் உட்படப் பலர் உரையாற்றுவர்.

24ம் திகதி பல இசை நிகழ்ச்சிகளும், 'கர்வபங்கம்', 'தாகசாந்தி', 'நீதிதேவன்' எனும் நாடகங்களும் இடம் பெறும். (ச)

## மரம் நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மகளிர் பயிற்சிக் கலாசாலையில் நாளை மரம் நாட்டுவிழா நடைபெறவிருக்கிறது. இவ்விழாவில், வடமாநில கல்வி அதிபதி திரு. ரி. மாணிக்கவாசகர்கலந்துகொள்வார். (க-அ)

## விவசாயபீட அனுமதி

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பல்கலைக் கழக பேராதனை வளாக விவசாய பீடத்துக்கு அனுமதிக்கப்படுவோரின் அனுமதிப்பத்திரங்கள் சகலருக்கும் அனுப்பப் பட்டுள்ளன.

இவர்களது பயிற்சி முதல் ஒரு மாதம் அனுராதபுரம் புளியங்குளம் ஜெர்மன் பண்ணையில் ஆரம்பமாகும். திங்கட்கிழமை அங்கு சமுகம் அளிக்கும்படி அனைவரும் கோரப்பட்டுள்ளனர். (ச)

## புலமைப்பரிசிலில் சென்னைபயணம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாயைச் சேர்ந்த திரு. ப. முத்துக்குமாரசாமி சர்மா புலமைப்பரிசில் பெற்று சாகித்திய சிரோன்மணி பட்டப்படிப்பை மேற்கொள்ள சென்னை சென்றுள்ளார்.

இவர் யாழ்ப்பாணம் வியாகரண சிரோன்மணி [illegible]. கே. சீதாராம சாஸ்திரிகளிடம் முறையாக ஆகமங்களைக் கற்றுணர்ந்து முதல் மாணவராக விளங்கியவர் மேலும் இவர் பல ஆலயங்களில் நடைபெற்ற விசேஷ வைபவங்களிலும் சமயப் போட்டிகளிலும் கலந்து முதன்மையாகத் திகழ்ந்தவர்,

நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய விசேஷ குருக்களான கோப்பாய வடக்கைச் சேர்ந்த பிரதிஷ்டா கிரியா கலாபமணி சிவஸ்ரீ வை.மு. பரமசாமிக் குருக்களின் புதல்வராவார். (அ)

## பண்டத்தரிப்பில் நாளை இளம் விவசாயிகள் விழா

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டைத் தொகுதி இளம் விவசாயிகள் கழகங்கள் தினவிழாவும்,பொருட்காட்சியும், மரம்நாட்டுவிழாவும் நாளை சனிக்கிழமை பிற்பகல் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி அதிபர் திரு. வி. நாகராசா தலைமையில் நடைபெறும் இவ்விழாவிவ் பிரதம அதிதிகளாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணாண்டோ, வடமாநிலக் கல்வி அதிபர் திரு. ரி. மாணிக்க வாசகர், யாழ் மாவட்ட விவசாய அதிபர் திரு. என். சிவமுத்துலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர், வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு, மில்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா, சர்வோதயத் தொண்டர் திரு. நாக.பத்மநாதன் ஆகியோர் உட்படப் பலர் இவ்விழாவில் கலந்து கொண்டு ஆசியுரை வழங்குவார்கள்.

வானொலி விவசாய அறிவுப் போட்டி, அலங்கார ஊர்திகள் பவனி,நடனங்கள், நாடகங்கள் என்பனவும் நடைபெறவுள்ளன. (அ)

## 100 கணித ஆசிரியர்கள் விரைவில் நியமனம்

(கொழும்பு)

100 கணிதஆசிரியர்களை நியமிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பல்கலைக்கழகத்தில் கணித பாடத்தில் சித்தியெய்தி தற்போது வேலையில்லாது இருப்பவர்களிடமிருந்து இப்பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக கல்வியமைச்சர் திரு. நிசங்கா விஜயரத்னதெரிவித்துள்ளார்.

## புகையிரத நிலைய அதிபர்களுக்கு சம்பள உயர்வு

(கொழும்பு)

புகையிரத நிலைய அதிபர்களுக்கும் உதவிப்புகையிரத நிலைய அதிபர்களுக்கும் விரைவில் சம்பள உயர்வு கிடைக்க இருக்கிறது.

எல். பி. டி.சில்வா சம்பளக் கமிஷன் சிபார்சுக்கமைய இன்னும் இரு மாதங்களில் இவர்களுக்கு சம்பள உயர்வுகிடைப்பதோடு சம்பளப்பாக்கிப்பண

[6-ம் பக்கம் பார்க்க]

Rio (Jaffna) Phone: 7607
Daily 4 Shows
2nd Glorious and Crowded Week
Peter Fonda,
DIAMOND MERCENARIES

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா அசோகன்
ராமன் தேடிய சீதை

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர். - லதா
நினைத்ததை முடிப்பவன்
(புதிய பிரதி - கலர்)

REGAL Jaffna Daily at 4-45, 7- & [illegible]0 P. M. only.
DEATH LAID AN EGG
(color - Spy Thriller)
From: 22-7-78 MAN ON THE MOON

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சௌகார்ஜானகி-சுந்தரராஜன் நடித்த
பேரும் புகழும்

ராஜா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ரஜனி-ஆலம் சுதா-வை.விஜயா நடித்த
மன்மத லீலை
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - வாணிஸ்ரீ
நிறைகுடம்

லிடோ (யாழ்.நகர்) போன்: 7692
சிவகுமார், அல்கா
மதனமாளிகை

மனோகரா (யாழ்ப்பாணம்) (புத்தம் புதிய பிரதி)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - கே.ஆர்.விஜயா
விவசாயி

ராணி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
கடைசி சில தினங்கள்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - லக்ஷமி - நாகேஷ் - மனோகர் நடித்த கே. பாலசந்தரின்
நூற்றுக்கு நூறு
(புதிய பிரதி)

# "துணுக்காய் குறைபாடுகள் விரைவில் நீங்கும்"

## யாழ்.அரசாங்க அதிபர் உறுதி

(யாழ்ப்பாணம்)

"துணுக்காய் மிகவும் பின்தங்கிய பகுதி. இப்பகுதியை முன்னேற்றவேண்டும் என்பதில் எனக்கு மிகுந்த அக்கறை உண்டு. இங்கு நிலவும் போக்குவரத்து நீர்ப்பாசன குறைபாடுகளை நான் இன்று காலை நேரில் சென்று பார்வையிட்டேன். இவற்றுக்கு வெகு விரைவில் நிவாரணம் கிடைக்கும்" என்று கடந்த செவ்வாய்க்கிழமை துணுக்காய் பகுதிக்கு விஜயம்செய்த யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. எம். ஈ. லயனல் பெர்ணன்டோ, துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் அதிகாரிகள் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார். இக் கூட்டத்தில் முல்லைத்தீவு எம். பி. திரு. எக்ஸ். எம். செல்லத்தம்புவும் கலந்துகொண்டார். யாழ். அரசாங்க அதிபர் மேலும் கூறியதாவது:

"பாலிஆற்று அணைக்கட்டுத்திட்டம், கல்விளான் குளம் வரம்பு உயர்த்தும் திட்டம் ஆகியவற்றை இந்த ஆண்டிலேயே மேற்கொள்ள நீர்ப்பாசன இலாகா இணக்கம் தெரிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. உதவி அரசாங்க அதிபர் இவ் விஷயத்தை பல கட்டங்களில் வலியுறுத்தியுள்ளார். விரைவில் விமோசனம் கிடைக்கும் என்று நம்பலாம்.

"முல்லைத்தீவு துணுக்காய் பஸ்சேவை. புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது போக்குவரத்துக் குறையைத் தீர்த்துவைக்கும், வாலாவி ஆஸ்பத்திரி குறைபாடுகள் உள்ளன. இதுசம்பந்தமாக சுகாதார உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு ஆவனசெய்யபடும். உங்கள் கூட்டுறவு சமாசங்களுக்கு, உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திலிருந்து உணவுப்பொருள்கள் பெறும் உத்தரவுச்சீட்டுகளை வழங்க இன்றுமுதல் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன" என்று கூறினர்.

### பீலிக்ஸ்--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நீதியமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ்பண்டாரநாயகா, உதவி அமைச்சர் திரு. நீல்டி அல்விஸ் ஆகியவர்கள் சார்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் தொடர்பாகவே மேற்படி நோட்டீஸ் விடுக்கப்பட்டது.

மேற்படி ஆணையாளர்களின் அறிக்கைகளை ரத்து செய்யும்படி மனுதாரர்கள் கோரியுள்ளனர். நீதியரசர்கள் உடலகம, நொயல்தித்தாவல, வல்பிட்ட ஆகியவர்களின் முன்னிலையில் இந்த மனுவிசாரிக்கப்படவிருக்கிறது. (ம)

### கோட்டையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காடைத்தனத்துக்கு இடமளிக்கலாகாது என்று குறிப்பிட்ட எதிர்க்கட்சித்தலைவர் இச்சம்பவம் உண்மையானல் உடன் நடவடிக்கை எடுக்கும் படியும் கேட்டுக் கொண்டார். கொத்மலை உறுப்பினர் திரு. வலகம்பாவும் இச்சம்பவம்பற்றி சபையில் குறிப்பிட்டு பேசினர்.

பிரதமர் பிரேதமதாசா இதற்குப் பதிலளிக்கையில், இப்பொழுது தான் தமக்கும் சம்பவம்பற்றிய தகவல் வந்தது என்றும், அநுன்பம வேலைநிறுத்தம் செய்த ஊழியர்களுக்கும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடாத ஊழியர்களுக்குமிடையிலேயே மோதல் ஏ[ற்]பட்டதாகத் தெரிகின்றது என்றும், [பொதுமக்களின் பாதுகாதுகாப்பை பொலிசார் கவனித்துக் கொண்டார்கள் என்றும் பொலிசாரையும் சிலர் தாக்கியிருக்கிறார்கள் என்றும் கூறினர்.

வேலைநிறுத்தத்திற்கான கோரிக்கை மீது மாவட்ட நீதிமன்றமே தீர்ப்பொன்றை வழங்கிவிட்டது. அக்கோரிக்கையை நீதிமன்றமே தள்ளிவிட்டபின் மீண்டும் அதனைக் கிளப்புகிறார்கள். என்றாலும் இதுபற்றி ஆலோசிக்க வேண்டுமானல் ஆலோசிக்கப்படும். ஊழியர்களின் உரிமைகளைப் பறிக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை. காடைத் தனத்திற்கும் இடம்கொடுக்கப்படமாட்டாது என்று பிரதமர் கூறினர், சம்பவம்பற்றி ஆராயத் தயாராய் இருப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார். (ம)

### வடமாகாண கல்வித் திணைக்கள

## தவணை இறுதிப் பரீட்சை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வித்திணைக்களத்தினல் நடாத்தப்படும் தவணை இறுதிப் பரீட்சைகள் இம்மாதம் 22ம் தேதி சனிக்கிழமை முழுநாளும் நடைபெறுவதை வடமாகாண ஆசிரியர் சங்கம் ஆட்சேபித்ததைத் தொடர்ந்து சனிக்கிழமை நடாத்தப்படவிருந்த பரீட்சை பின்போடப்பட்டுள்ளது.

வடமாகாண ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. ச. இ. சுந்தரலிங்கம், வடமாநில கல்வி அதிபர் திரு இ- மாணிக்கவாசகருக்கு இதுபற்றி ஆட்சேபம் தெரிவித்திருந்தார்.

இந்த ஆட்சேபத்தில் கூறப்பட்டிருப்பதாவது: 'சனிக்கிழமை வேலைநாளாக இருந்த காலத்தில்கூட பிற்பகலில் பரீட்சை நடைபெறுவதில்லை, ஆதலால் இந்நடவடிக்கையை வன்மையாகக் கண்டிக்கிறோம், வழக்கமாக சனிக்கிழமைகளில் மாணவர் வரவு குறைவாகவே இருக்கும். அதுவும் பிற்பகலில் வரவு மிகக் குறைவாக இருக்கும். அமைச்சின் சுற்றுநிருபப்படியும். தங்களின் வேண்டுகோளின்படியும் 22ம் தேதி சனிக்கிழமை மரம் நாட்டு விழாவிற்கு மாணவரும் ஆசிரியரும் பங்குபெறும்படி கேட்கப்பட்டுள்ளனர். இதேநேரம் சனிக்கிழமையில் பரீட்சை நடத்தினல், இந்த் மரம் நாட்டுவிழாவிற்கு தடையாக இருக்கும். ஆதலால் சனிக்கிழமைப் பரீட்சையைப் பின்போடுங்கள்"

இந்த ஆட்சேபத்தைத் தொடர்ந்து சனிக்கிழமை பரீட்சை பின்போடப்பட்டுள்ளது. (கு)

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## லொறி விற்பனை

மேற்படி சங்கத்திற்குச் சொந்தமான 24 ஸ்ரீ 2315 இலக்க "இசுசு" லொறி பழுதடைந்தநிலையில் . கேள்விப்பத்திர மூலம் விற்பனைசெய்யப்படும். மீளளிக்கும் கேள்விப்பணமாக ரூபா 1000/- கட்டுவதன்மூலமும் கேள்விப்பத்திரம் ஒன்றுக்கு ரூபா 5 - கட்டுவதன் மூலமும் சங்கத்தால் விநியோகிக்கப்படும் கேள்விப்பத்திரத்தில் விண்ணப்பித்தல்வேண்டும். கேள்விப்பத்திரம் அனுப்பும் தபால்உறையின் இடதுபக்க மேல்மூலையில் "லொறி கேள்விப்பத்திரம்" என எழுதப்பட்டிருத்தல்வேண்டும்.

கேள்விப்பத்திரம் 31-7.78ம் திகதி பிற்பகல் 4-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். சங்கத்தால் அறிவிக்கப்பட்டு மூன்று நாட்களுக்குள் முழுப்பணத்தையும் கட்டி லொறியை உடன் பாரம் எடுத்துக்கொள்ளல்வேண்டும்.

லொறியை பார்வையிட விரும்புவோர் யாழ்ப்பாணம் 109ம் இலக்க சிவன்கோவில் வடக்கு றேட்டில் இருக்கும் நஷனல் டீசல் இஞ்ஜினியேர்ஸ் (National Diesel Engineers) கராச்சில் பார்வையிடலாம். மேற்கொண்டும் விபரங்கள் அறிய விரும்புவோர் சங்கக் காரியாலயத்தில் தொடர்பு கொள்க.

பொதுமுகாமையாளர்.

வேலணை,
20-7-78.

9866

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஜூலை மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No: 49, Jaffna - Telegram: Ealanaadu-Telephone: 389 - Registered as a News paper in Sri Lanka.

### அதிபர்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

மும் கிடைக்கவிருக்கிறது.

சம்பளஉயர்வு தொடர்பான கமிஷன் சிபார்சை அமுல்செய்வதற்கான அங்கீகாரத்தை அரசு ஏற்கனவே அளித்துள்ளதென்றும் ரயில்வேப்பகுதி பொதுமுகாமையாளர் திரு. எல். ஏ. ஏ. பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தினல் 1,500 புகையிரதநிலைய அதிபர்களும் உதவி அதிபர்களும் பயனடைவர். (இ)

### காசி ஆனந்தன் தலைமையில்

## தமிழர் விடுதலை வேண்டி

### காந்தா மலைக்கு பாத யாத்திரை

(மட்டக்களப்பு)

தமிழ் பேசும் மக்களின் விடுதலை வேண்டி கடந்த செவ்வாய்க்கிழமை ஸ்ரீ காந்தாமலைக்கு மட்டக்களப்பு த. வி. கூட்டணிச் செயலாளர் கவிஞர் காசி ஆனந்தன் தலைமையில் பாதயாத்திரை மேற்கொள்ளப்பட்டது. இப் பாதயாத்திரையில் கல்குடா பட்டிருப்பு ஆகிய தொகுதிகளைச் சேர்ந்த மகளிர் பேரவை, இளைஞர் பேரவை த.வி.கூட்டணியினரும் கலந்து கொண்டனர்.

பட்டிருப்பு எம். பி. திரு. பூ. கணேசலிங்கம் மேற்படி பாதயாத்திரையை சலுதாவளைப் பிள்ளையார் கோவிலடியிலிருந்து தொடக்கி வைத்தார்,

பெரியபோரதீவு ஊடாகச் சென்று கொக்கட்டிச் சோலை தான்தோன்றீஸ்வரன் கோயிலையடைந்து பின்னர் பிரதான வீதியூடாகப் பாதயாத்திரை காந்தாமலையை சென்றடையும்.

### மட்டுவில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ராதிகள் எனத் தெரிவித்தனர்.

தீர்ப்பை அறிவதற்கு உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் காணப்பட்டனர். (க)

### கலாபதியை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துரையப்பா கொலைவழக்கில் முதல் எதிரியாகவிருந்த இவர் விடுதலைசெய்யப்பட்டு இன்ஸ்பெக்டர் பத்மநாதன் கொலைதொடர்பாக மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. (ம)

### சட்டப்புத்தகங்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு நீதிபதி தெரிவித்தார்.

அதன்பின் தீர்ப்பு வழங்குவதற்கான தேதி அறிவிக்கப்படும்.

இவ்வழக்கில் நாவற்குழியை சேர்ந்தவரும். சாவகச்சேரி மக்கள் வங்கி ஊழியருமான பரராசா செம்மணியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டது சம்பந்தமாக அவரது தந்தை சின்னத்தம்பி பொன்னம்பலம் சட்டமாஅதிபரிடமிருந்தும். பொலிஸ் கான்ஸ்டபிள் டபிள்யு. டீ. ஏ. ஜே. ஸ்ரான்லியிடமிருந்தும் தனித்தும் ஒருமித்தும் 50 ஆயிரம் ரூபா நஷ்டஈடு கோரியுள்ளார். (க)

### வேலைநிறுத்தம்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஊர்வலம் இடைநடுவில் பொலிஸாரால் தடைசெய்யப்பட்டது.

யாழ். செயலகத்தின் முன்பாக வங்கி ஊழியர் வேலைநிறுத்தத்திற்கு ஆதரவாக மதிய இடைவேளையின்போது அரசாங்க லிகிதர் சேவைச்சங்கம் அனுதாபக்கூட்டத்தை நடத்தியது.

இக்கூட்டத்திற்கு வடபிரதேச கூட்டுத்தொழிற் சபையின் செயலாளர் திரு. வே. பொன்னம்பலம் தலைமைதாங்கினர். [தொழிற்சங்க] பிரமுகர்கள் திருவாளர்கள் ஆர். பானுதேவன், ரி. சிவபாலன், எஸ், கணேசன் ஆகியோர் உரையாற்றினர். (செ)

### கிழக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்த்துக் கொண்டிருக்கிறோம்

இவ்வாறு நேற்று கல்வி அமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்ன தேசிய அரசுப்பேரவையில் கூறினர்.

பல்கலைக்கழக வளாகங்களுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்த யோசனை ஒன்றுக்கு அமைச்சர் பதிலளித்தார்.

யாழ்' வளாகத்துக்கு மருத்துவ மாணவரும் அனுமதிக்கப்படுவதால் அங்கு கட்டடங்களும் இதர வசதிகளும் போதாமலிருப்பதாகவும் அவைகளை நிவர்த்திசெய்யும் வகையில் நிறுவப்படவேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்,

அவ்வாறே செய்வதாககல்வி அமைச்சர் தெரிவித்தார்.

### சட்டமூலம்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கிளப்பியதாக திரு. மைத்திரிபாலசேனநாயக்கா தெரிவித்தார்.

உள்ளூர் அதிகாரசபைகள் (தகுதியீனங்களை விதித்தல்) 1ம் 2ம் இலக்க சட்டமூலங்களையும் உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல் சட்டத் திருத்தமூலமொன்றையும் பிரதமமந்திரி சபையில் சமர்ப்பித்தார்.

மேற்படி இரு சட்டங்கள் மீதும் மைத்திரிபாலசேனநாயகா ஒழுங்குப்பிரச்னைகள் கிளப்பினர். இரண்டுக்கும் ஒரேவிதமான பதிலை பிரதமர் வழங்கினர். (ம)

### காந்தாமலை தீர்த்தம் நாளை

(மட்டக்களப்பு)

கிழக்கிலங்கையில் பிரசித்தி பெற்று விளங்கும் ஸ்ரீ காந்தாமலை முருகன் ஆலய வருடாந்த தீர்த்தோற்சவம் நாளை சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது. (அ)

### உர இறக்குமதி

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையில் உரக்கப்பலிலிருந்து இறக்குமதியில் ஏற்பட்ட தாமதம், அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணன்டோ தலையிட்டதைத் தொடர்ந்து துரிதமாக நடைபெற்றது. (கு)

## வடக்கில் சிரமதான மூலம் 377 குளங்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வவனியா, மன்னர் மாவட்டங்களில் உள்ள 377 குளங்களை சிரமதானம் மூலம் புனரமைப்புச் செய்யும் பணிகளில் கிராம விருத்திச்சங்கங்கள் ஈடுபட்டு வருகின்றன.

கிராமாபிவிருத்தித் திணைக்களங்கள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

யாழ். மாவட்டத்தில் சாவகச்சேரி, வேலணை, பளை, வடமராட்சி, ஊர்காவற்றுறை, சுன்னகம், கரவெட்டி, கோப்பாய் ஆகிய இடங்களில் உள்ள 294 குளங்களும் தற்போது புனரமைப்பு செய்யப்பட்டுவருகிறது.

இக் குளங்கள் திருத்திய பின்னர் 6215 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசனம் வழங்கப்படும்என்றுதெரிவிக்கப்பட்டது.

புனரமைப்பு பணிகளில் ஈடுபட்டுவரும் தொண்டர்களுக்கு மா, பருப்பு, சீனி, கருவாடு ஆகியவற்றை கிராம அபிவிருத்தித் திணைக்களம் இலவசமாக வழங்கி வருகிறது (இ)